திருநெல்வேலியில் விமான நிலையம்

* 247 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் விமான நிலையம் துவக்க வேண்டும் என மாநில அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, திருநெல்வேலியில் விமான தளம் அமைக்க இனிமேலாவது உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இனிமேலும் என்று அல்ல, ஏற்கனவே பல முறை எழுதி கேட்டிருக்கிறோம். மத்திய அரசு ஒத்துக் கொள்ளவில்லை.

தேசிய நெடுஞ்சாலைகள் மேம்பாட்டுப் பணிகள்.

* 248 வின.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-74-ம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக்கென மத்திய அரசு, மாநில அரசுக்கு அளித்த தொகை எவ்வளவு ?

(இ) அதில் இதுவரை எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 1973-74-ம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலை அபிவிருத்திக்கென மத்திய அரசு, மாநில அரசுக்கு அளித்த தொகை ரூ. 397.00 இலட்சமாகும்.

(இ) 30—10—1973 முடிய ரூ. 186.49 இலட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளுக்காக கொடுக்கப்படுகிற தொகையானது நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிகிறது. மேலும் அதிகமான தொகை வேண்டுமென்று முன்பு கேட்டிருக்கிறேன். அதற்குத் திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. ரூ. 8 கோடி